**ஹக்மன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 ஆந் திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹக்மன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டுகளுக்கான 07 நிர்மான வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 2,167,531 தொகை நிர்மான வேலை கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மான வேலைக் கடன்கொடுத்தோருக்காக ரூபா 65,611 தொகை மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 133,765 தொகைக்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 39,402,110 தொகைக்கான 19 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 20,384,788 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல ஆண்டுகள் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 873,211 இற்கான தொங்கல் கணக்கில் வரவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து கணக் குகளில் தேவை யான சீராக்கல் மேற்கொண்டு தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 20,811,355 தொகைக்கான 22 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சுமார் 07 வருட காலம் முதல் மாற்றமின்றிக் காணப்படும் பெறுமதி களாகக் காணப்படு வதுடன் எதிர்காலத்தில் துணை பதிவேடுகளை தேடிப்பெற்று முடிந்த அளவு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கு டன் சீராக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதி 143 இன் படி நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 213 | களஞ்சியத்தில் இருந்து பண்டங்கள் வழங்கும் போது சபைச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக் கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | களஞ்சியத்தில் இருந்து பண்டங்கள் வழங்கும் போது சபை செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நி.பி. 571 | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 4,167,341 இற்கான 85 பிடித்துவைத்தல் வைப்புப் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது சபைக்குக் கிடைக்கும் வருமானம் போதியளவாக காணப்படாமையால் நகர அபிவிருத்தி க்காக திட்டமிடப் பட்டுள்ள கடைத் தொகுதியை நிர்மானித்து வருமான நிலைமையை இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நி.பி. 1646 | சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,933,283 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,586,757 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பேணப்பட்டிருந்த வங்கி நடைமுறை கணக்கு ஒன்றில் பல வருட காலத்திற்கு முன்னர் எட்டு சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 15,910 தொகைக்கான காசோலைகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் தேறியிருக்கவில்லை. | மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக பணத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பேன். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,614,060 | 1,598,917 | 1,557,045 | 1,375,799 | 1,531,100 | 1,621,679 | 1,386,345 | 1,333,927 |
| வாடகை | 8,368,000 | 7,798,518 | 9,044,876 | 747,694 | 7,625,305 | 7,375,441 | 5,875,399 | 1,994,052 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 411,000 | 492,922 | 469,322 | 39,100 | 459,000 | 669,679 | 665,229 | 15,500 |
| ஏனைய வருமானங்கள் | 11,053,000 | 17,020,957 | 14,354,369 | 14,593,378 | 6,440,000 | 5,712,437 | 7,822,375 | 11,926,790 |
| மொத்தம் | 21,446,060 | 26,911,314 | 25,425,612 | 16,755,971 | 16,055,405 | 15,379,236 | 15,749,348 | 15,270,269 |

## 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி**<br>ஆரம்ப நிலுவை ரூபா 1,051,907 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,089,852 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,141,759 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,305,860 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 835,899 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல்களில் 61 சதவீதம் அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2020 ஆண்டின் ஜனவரி மாதத்தில் அறவீடு செய்யப்பட்ட வீதவரியில் அதிகமான பங்கு வருடாந்த கட்டணமாக அறவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நிலுவை வீதவரியை எதிரகாலத்தில் அறவீடு செய்வேன். |
| **(ஆ) ஏக்கர் வரி**<br>ஆரம்ப நிலுவை ரூபா 43,490 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 6,060 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 49,550 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,830 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 44,720 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ஆரம்ப நிலுவையில் மற்றும் சிட்டையிடலில் 10 சதவீதம் அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்கவில்லை. |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **நில வாடகை** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 238,530 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 322,650 தொகையான சிட்டையிடலுடன் ரூபா 561,180 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 66,000 தொகையாக காணப்பட்டமையால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 495,180 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப நிலுவையில் மற்றும் சிட்டையிடல்களில் 12 சதவீதம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இணக்க சபைக்கு சமர்ப்பித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.3.4 நீர்க் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 831,425 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 200,681 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,032,106 தொகை ஆண்டின் போது அறவிடப்பட வேண்டி யிருந்தது. ஆண்டிற்கான மொத்த அறவீடுகள் ரூபா 127,195 தொகையாகக் காணப்பட்டமையால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 904,911 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்கவில்லை. |

### 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 1,277,911 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 12,410,556 முத்திரைக் கட்டணத் தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அனுப்புமாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் விண்ணப்பி த்துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலக்கம் 1597/08 மற்றும் 2019 ஏப்ரல் 17 ஆந் திகதிய வர்த்தமானியின் 9 ஆவது பிரிவின் பிரகாரம் முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த 06 நிர்மான வேலைகள் தொடர்பான கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வழக்குகள் தாக்கல் செய்யவதற்கான ஆலோசனை பெறுவதற்காக விண்ணப்பத்திருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு பொறுப்பாக இருப்பேன். |
| (ஆ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபச/05/06/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 161 கடைகளுக்கான உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் 11 ஆம் பிரிவிற்கு இணங்காத முறையில் 05 கடைகள் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வேன். |
| (இ) | அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு கழிவறை உதவி வழங்குவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 850,000 தொகை ஒதுக்கப்பட்டு ரூபா 500,000 தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. இதற்கான செயற்திட்ட அறிக்கை தயாரித்திருக்காததுடன் நலன்பெறுவோர் தெரிவு செய்யும் அடிப்படை விளக்கப்படவில்லை. 2020 பெப்ரவரி 25 மற்றும் 26 திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது குறைந்த வருமானம் பெறுவோர் அல்லாத ஏழு நலன்பெறுவோருக்கு உதவி வழங்கப்பட்டிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடன் அத்தொகை அறவிடப்பட வேண்டும். | செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்படுகின்றது. சரியான நடைமுறை கடைபிடிப்பேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 18 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 02 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைகள் பதவிக்கான முறைப்படுத்துவதற்காக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிப்பதற்காக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர்கள் 04 பேரிடம் அறவிடப்படாமல் காணப்பட்ட ரூபா 25,750 இற்கான கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதி விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடன் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலக்கம் 2103 மற்றும் 2018 திசெம்பர் 14 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஹக்மன பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தல் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த வெளிக்கள கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது ஹக்மன பெலியத்த பாதையில் மற்றும் ஹக்மன வலஸ்முல்ல பாதையில் பொறுத்தப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 181 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 624,570 இற்கான கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 10 ஏக்கர் 02 ரூட் 13.35 பர்சஸ் தொகைக்கான 11 காணிகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 115,000 தொகை பெறுமதியான கெபலியபொல வளநிலையம் மற்றும் பெலும்கல சனசமூக நிலையம் என்பவற்றின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படாதிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி வரை விளைவற்று காணப்பட்டது. | புனர்நிர்மாணம் செய்து விளைவற்று காணப்படும் சொத்துக்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | குறைபாடுகளை திருத்துவற்காக சபையில் நிதி காணாமையால் எதிர்காலத்தில் ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டு பண்பாட்டு நிலையமொன்று ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பெலும்கல சனசமூக நிலையத்தின் உரிமையை உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 130,862 தொகை பெறுமதியான சீமெந்து அச்சுகல் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் 2012 ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்படும் இயந்திரங்களை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | ஏல விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான ரூபா 1,320,000 தொகை பெறுமதியான 06 வாகனங்கள் விளைவற்று காணப்பட்டதுடன் அவற்றை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த முடியாவிடின் அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் அந்த உரித்தாக்கல் மேற்கொள்ளப்பட்ட உடன் இந்த 06 வாகனங்களையும் அப்புறப்படுத்துவற்கு அல்லது திருத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். |